*உங்கள் சகோதரனிடமிருந்து*

ஆத்தும நாயகராம் அன்பான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் 11ஆவது மாதத்தில் பிரவேசிக்க கிருபை செய்தார். தேவனைத் துதியுங்கள். அக்டோபர் மாதத்தில் 7 வாலிபர் முகாம்கள், 4 சிறுவர் முகாம்கள், ஒரு குடும்ப முகாம் ஆகியன நடைபெற தேவன் நம்மோடு இருந்து வழிநடத்தினார். ஜெபித்த உங்கள் யாவருக்கும் நன்றி.

இந்தப் பத்திரிக்கை உங்கள் கைகளில் கிடைக்கும்போது நமது திருச்சி மாவட்ட ஆத்தும ஆதாய பயிற்சி முகாம் நடைபெற்று முடிந்திருக்கும் தொடர்ந்து இன்னும் நடைபெற உள்ள நவம்பர் மாதத்தின் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

வேலூர் C.M.C. மூலம் நடைபெற்ற ஷைலோ 2012 தமிழ் கூட்டங்கள் மற்றும் நற்செய்தி கூட்டங்கள் ஆசீர்வாதமாய் நடைபெற்றது. அதை ஒழுங்கு செய்த சகோதரர் யாவருக்காகவும் ஜெபியுங்கள்.

2 ஆலயமில்லா கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள் நடைபெற்றன. அதன் மூலம் நமது மிஷனரிப் பணி இன்னும் பலமடைய ஜெபியுங்கள்.

நமது மிஷனரிகள் யாவரையும் உங்கள் ஜெபத்தில் தாங்குங்கள். நமது ஊழியத்தில் இன்னும் நான்கு மிஷனரி குடும்பங்கள், மற்றும் வாலிப சகோதரர்கள் மிஷனெரிப் பணிக்கு தேவை அதற்காக ஜெபியுங்கள். அர்ப்பணமுள்ள உண்மையும் உத்தமுமான ஊழியர்களை உங்கள் ஜெபம் கேட்டு தேவன் தருவார்.

விசேஷமாக எனக்காகவும் நமது ஊழிய President சகோ. S. ஜெபராஜ் அவர்களுக்காகவும் நாங்கள் கலந்து கொண்டு செய்தியளிக்கும் ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள். பண்டிகை காலங்களில் நமது மிஷனெரிகளை நினைவுகூருங்கள் மற்றும் ஏழைகளை மனதில் கொள்ளுங்கள் இந்தத் தேவைகளுக்காக ஜெபியுங்கள். உங்கள் பங்குகளை அனுப்புங்கள். தேவை ரூ. 2 இலட்சம். VBS தன்னார்வ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.

உங்களுக்காக ஜெபித்து வருகிறோம். எங்கள் ஜெபங்களில் உங்களை எப்பொழுதும் நினைவு கூறுகிறோம்.

உங்களுக்காக ஜெபிக்கும் சகோதரன்

**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

---


I – Jesus – have called you friends John 15:15

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!!

**Philio - 2013**

*தூத்துக்குடியில்*

**இளைஞர் இனிய பெருவிழா**

நாள் : **14-2-2013 வியாழக்கிழமை *(Valentine Day)***

இரவு : **மாலை 4.30 - 8.00 மணி முடிய**

இடம் : **காய்கனி மார்க்கெட் மைதானம் VOC கல்லூரி எதிரில்**

*செய்தியாளர் :*

அண்ணன் **மோகன் C. லாசரஸ்** இயேசு விடுவிக்கிறார்

தொடர்பு : **கிருபையின் ஊழியங்கள் - 94432 89026, 94421 20257**

**(இயேசு) நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்.** யோவான் 15:15




# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 50**
நவம்பர் 2012

**எரேமியா**

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

2451 கர்த்தருக்கு மகிமையைச் செலுத்து (13:16)
2452 கர்த்தருடைய வார்த்தைகளை உட்கொள் (15:16)
2453 கர்த்தர் மேல் நம்பிக்கை வை (17:7, 39:18)
2454 தேவரீரே உன் துதி (17:4)
2455 சேனைகளின் கர்த்தரைத் துதி (20:13, 33:11)
2456 கர்த்தரைப் பாடு (20:13)
2457 ஸ்தோத்திர பலிகளைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக கொண்டு வா (17:26, 33:11)
2458 கர்த்தருடைய நாமத்தை மறவாதே (23:27)
2459 உன் வழிகளையும், கிரியைகளையம் சீர்ப்படுத்தி, உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேள் (26:13)
2460 "முழு இருதயத்தோடும் என்னைத் தேடு; என்னைக் கண்டு பிடிப்பாய் "(29:13)
2461 "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" (33:3)
2462 "எனக்குக் கீழ்ப்படி" (35:14,15,16)
2463 கர்த்தர் பேசும்போது கேளாமலிராதே (35:17)
2464 "நான் கூப்பிடும் போது மறு உத்தரவு கொடு (35:17)
2465 கர்த்தர் தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொல்லும் வார்த்தைகளுக்குச் செவிகொடு (37:2)
2466 கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடு; அப்பொழுது உனக்கு நன்மையாயிருக்கும்; உன்னுடைய ஆத்துமா பிழைக்கும் (38:20)
2467 "நீ பயப்படாதே; கலங்காதே; நான் உன்னுடனே இருக்கிறேன்" (46:27,28)
2468 மேய்ப்பனே! உன் உதடுகளிலிருந்து புறப்படுவது கர்த்தருக்குமுன்பாக செவ்வையாயிருப்பதாக (17:16)
2469 ஓய்வுநாளில் உன் ஆத்துமாவுக்காக எச்சரிக்கையாயிரு (17:22)
2470 ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கு (17:22,24,27)
2471 உன் தீங்கை விட்டுத் திரும்பு (18:8)
2472 உன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உன் வழிகளையும் உன் கிரியைகளையும் சீர்படுத்து (18:11, 35:15, 36:3)
2473 நியாயமும் நீதியும் செய் (22:3)
2475 பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையும் ஒடுக்காமல் இரு (22:3)
2476 குறிகாரருக்கும், சொப்பனக்காரருக்கும், நாட்பார்க்கிறவர்களுக்கும், சூனியக்காரருக்கும் செவிகொடாதிரு (27:9)
2477 மதிகெட்ட காரியத்தைச் செய்யாதே (29:23)
2478 விபசாரம் பண்ணாதே (29:23)
2479 என் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தாதே (32:34)
2480 உன் குமாரரையும், உன் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணாதே (32:35)
2481 அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி, அவர்களைப் பின்பற்றாதே (35:15)
2482 கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்யாதே ; அப்படிப்பட்டவன் சபிக்கப்பட்டவன் (48:10)
2483 பெருமையையும் மேட்டிமையையும் அகந்தையையும் கொள்ளாதே (48:29)

2484 மூர்க்கங் கொள்ளாதே (48:30)
2485 பட்டணத்தின்/ தேசத்தின் சமாதானத்திற்காகக் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணு; அதற்குச் சமாதானமிருக்கையில் உனக்கும் சமாதானமிருக்கும் (29:7)
2486 உன் கிரியைக்கும் பலனுண்டென்று அறி (31:16)
2487 உபதேசிக்கும்போது புத்தியை ஏற்றுக்கொள் (32:33)
2488 "கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று சொல் (33:11)

**புலம்பல்**

2489 "கர்த்தர் என் பங்கு" என்று சொல் (3:24)
2490 கர்த்தருக்குக் காத்திரு (3:25)
2491 கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திரு (3:26)
2492 உன் இளம்பிராயத்திலே நுகத்தைச் சுமந்தால், அது நல்லது என்று எண்ணி, கர்த்தரே அதை உன்மேல் வைத்தார் என்று தனித்திருந்து மௌனமாயிரு (3:28)
2493 நீ உன்னுடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பு (3:40)
2494 நீ உன்னுடைய கைகளோடும்கூட உன்னுடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடு (34:1)
2495 கர்த்தரைத் தேடு (3:25)

**எசேக்கியேல்**

2496 கர்த்தருடைய நியாயங்களை வெறுக்காதே (5:6)
2497 கர்த்தருடைய கட்டளைகளில் நட (5:6,7,19,21,23, 18:9,19,21, 36:27, 37:34)
2498 கர்த்தருடைய நியாயங்களின்படி செய். அவைகளால் பிழைப்பாய் (5:7,19,21,23, 18:9,19,21, 36:27, 20:11,12)
2499 கர்த்தருடைய ஆணையை அசட்டை பண்ணாதே (17:18,19)
2500 கர்த்தருடைய உடன்படிக்கையை முறித்துப் போடாதே (17:18,19)


## சிறுவர் குதூகல முகாம்கள்

இடம் : CSI ஆலயம், தாதன்குளம்
நாள் : 3-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய
தொடர்பிற்கு : 9486561726, 9442120257

இடம் : TNDTA நடுநிலைப்பள்ளி, பேரூர், தூத்துக்குடி மாவட்டம்
நாள் : 10-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய
தொடர்பிற்கு : 9487059453, 9442120257

இடம் : VGR திருமண மண்டபம், புதுக்கோட்டை
நாள் : 18-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய
தொடர்பிற்கு : 9442913156, 9442120257

*முகாம்களை நடத்துபவர்கள்*
**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்க குழுவினர்**

**ஜெபியுங்கள் சகோ. B. பொற்செல்வன் ஆசீர் செய்தியளிக்கும் கூட்டங்கள்**

| | |
|---|---|
| நவ. 10,11 | Rejoice Garden, கடலூர். |
| நவ. 16,17,18 | CSI ஆலயம், குளப்புரம், கன்னியாகுமரி மாவட்டம் |
| நவ. 25 | கோயம்புத்தூர் |




# மேன்மையான உயிர்த்தெழுதலின் விசுவாசம்

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த ஜுலை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 'ஆத்தும ஆதாயகர்' மாத இதழில் விசுவாசத்தைக் குறித்து கற்றுக்கொண்டு வருகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையால் இதுவரை சரீர, ஆத்தும இரட்சிப்புக்கேற்ற விசுவாசம், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஆவியின் வரமாகிய விசுவாசம், ஆவியின் கனியாகிய விசுவாசம் இவைகளை தெளிவாய் அறிந்து கொண்டோம். இந்த இதழில் மேன்மையான உயிர்த்தெழுதலின் விசுவாசத்தைக் குறித்து கற்றுக் கொள்ளுவோம்.

விசுவாசத்தினாலே ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள். (எபிரேயர் 11:35). திஸ்பியனாகிய எலியாவின் தேவார்த்தையின்படி கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் சாறிபாத் ஊர் விதவையின் வீட்டில் பானையின் மா செலவழிந்து போகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை (1இரா. 17:16) மகன் வியாதிப்பட்டு மரித்தபோது எலியா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அவனை உயிரோடே எழுப்பி அவன் தாயினிடத்தில் கொடுத்தார் (1இரா. 17:23). சூனேமியாள் மகள் மரித்தபோது எலிசா தீர்க்கதரிசி அவனை உயிரோடே எழுப்பி அவளிடத்தில் கொடுத்தான் (2இரா. 4:36). இயேசு, மகனை இழந்து அழுது கொண்டு வந்த நாயினூர் விதவையைப் பார்த்து மனதுருகி, அழாதே என்று சொன்னார். பாடையைத் தொட்டு வாலிபனே எழுந்திரு என மரித்துப் போன மகனை உயிரோடெழுப்பி அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தான். (லூக். 7:13-16)

இயேசு கிறிஸ்துவினிடத்தில் மார்த்தாள் ஒரு விசுவாச அறிக்கை செய்கிறாள். சகோதரனாகிய லாசரு மரித்துப்போனான். உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்பதை தெளிவாய் உரைத்தாள். இயேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் என்று விசுவாசிக்கிறேன் என்பதாகவும் அறிக்கையிடுகிறாள். மரியாளின் விசுவாசம் இயேசுவே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்பதே (யோ. 11:25,32) இயேசு கண்ணீர் விட்டார் (யோ. 11:35). சூழ நின்ற மற்றவர்களும் கூட விசுவாச அறிக்கை செய்கின்றனர் : குருடனுடைய கண்களைத் திறந்த இயேசு, லாசருவை சாகமலிக்கப் பண்ணவும் கூடாதா? இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கி கல்லறையினிடத்திற்கு வந்தார். இப்பொழுது நாறுமே, நாலுநாள் ஆயிற்றே என்றதும் இயேசு சொன்னார் : நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோ. 11:40). இயேசு லாசருவை உயிரோடு எழுப்பியபோது யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். பெத்தானியா சகோதரிகளாகிய மார்த்தாள், மரியாள் என்பவர்களின் விசுவாசம் மேன்மையான உயிர்த்தெழுதலின் விசுவாசமில்லையா? துன்பம், துயரம், இழப்பு, இவற்றின் மத்தியில் கலங்கித் தவிக்கும்போது உங்கள் மேன்மையான விசுவாசத்தை செயல்படுத்துங்கள். மற்றவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாக உங்கள் மூலம் தேவன் மகிமைப்படுவார்.

யோப்பா பட்டணத்தில் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள்

வியாதிப்பட்டு மரணமடைந்தாள். மற்ற சீஷர்களும் பேதுருவை அழைத்தனுப்பினார்கள். விதவைகளெல்லாரும் அழுது அவளைச் சூழ்ந்து நின்றார்கள். பேதுரு அவனை உயிரோடு எழுப்பினார் (அப். 9:42). மற்றவர்களின் விசுவாசத்தினாலே தபீத்தாள் உயிருடன் எழும்பினாள். தேவனுடைய வல்லமை விசுவாசத்தின் மூலம் செயல்படுகிறதை காண்கிறோம். அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். சில உயிர்த்தெழுதல்களை கூறிக்கொண்டே போகலாம். எலிசாவின் கல்லறையின்மேல் விழுந்த மனிதன் உயிருடன் எழுந்தான் (2இரா. 13:21) இயேசுவின் சிலுவை மரணத்தின்போது அநேக பரிசுத்தவான்கள் உயிருடன் எழுந்தார்கள் (மத். 27:52).

**உயிர்த்தெழுதலின் விசுவாச வாக்குறுதிகள் :**

அவர்களை நான் மரணத்திற்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? (ஓசியா 13:14). மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள். (யோ. 5:25). இயேசு சொன்னார், நான் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோ. 11:25). அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கொரிந்தியர் திருச்சபைக்கு எழுதுகிறார். ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் எழுந்திருப்பார்கள் (1கொரி. 15:22). கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் எழுப்புவார் (2கொரி. 4:14) என்பது பரி. பவுலின் அசைக்க முடியாத விசுவாசம். தேவன் கொடுத்திருக்கிற உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். விசுவாசத்தில் விழுந்து போனவர்களைப் பார்த்து விழுந்து போகிறவர்களாக அல்ல, எச்சரிப்பை உணர்ந்து மேன்மையான விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருங்கள். வேதத்தின் பரித்தவான்கள் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய தேவனை நோக்கிப் பார்த்து நடந்தார்கள். நாமும் அந்த விசுவாசத்திலே வளர்ந்து மேன்மை அடைவோம்.

---

**செய்திகள்**

- இந்தியாவில் மொத்த மின் மற்றும் மின்னணுக் கழிவுகளில் 70 சதவிகிதத்தை 10 மாநிலங்கள் பூர்த்தி செய்கிறது.
- அதில் முதலிடம் மஹாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடம் தமிழ்நாடு
- இந்திய நகரங்களில் அதிக மின் மற்றும் மின்னணு கழிவுகள் சேரும் முதல் நகரம் மும்பை. சென்னை நான்காவது இடத்தில் இருக்கிறது.
- இந்தியாவில் குளிர்சாதனப் பெட்டியினால் 10 இலட்சம் டன் கழிவு உற்பத்தியாகிறது.
- தொலைக்காட்சி பெட்டியினால் 2 இலட்சத்து 75 ஆயிரம் டன் கழிவு உற்பத்தியாகிறது.
- கணணி மூலம் 56 ஆயிரத்து 300 டன் கழிவு உற்பத்தி ஆகிறது.
- அலைபேசியின் மூலம் 1.700 டன் கழிவுகள் உற்பத்தி ஆகிறது.
- 2011 இல் தமிழ்நாட்டி மின் 28,155 மெட்ரிக் டன் கழிவு சேர்ந்தது.
- சென்னையில் 30,000 டன் கழிவு சேர்ந்தது.
- மின்னணு கழிவுகளில் உள்ள பாதரசம் கல்லீரலை பாதிக்கக்கூடியது.
- கேட்மியம் சிறுநீரகத்தைப் பாதிக்கும்
- பெரிலியம் நுரையீரல் புற்றுநோயை உண்டாக்கும்.



# “வேட்கையுடன் வாசியுங்கள், வேதாகமத்தை”

Dr. P. செல்வராஜ், கோவை

பள்ளி மற்றும் கல்லூரிகள் விடுமுறை நாட்களில், மாணவர்களுக்கு கல்வியினால் வளர்ந்துவரும் அவர்களுடைய அறிவாற்றலில் இழப்பு ஏற்படுகிறது என்று அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சி கூறுகிறது. அதற்கு காரணம் ‘வீடியோ’ படங்களைப் பார்ப்பது போன்ற கேளிக்கைகளில் விடுமுறை நாட்களை மாணவர்கள் செலவிடுவதாகும். ஆனால், புத்தகங்களை வாசிப்பது வாசிப்போரின் அறிவாற்றல் வளர்வதற்கு உதவுகிறது என்றும் அந்த ஆராய்ச்சி காட்டுகிறது.

புத்தகங்களை வாசிப்பதால் நிச்சயமாக நமக்கு நன்மையுண்டு. ‘புத்தகங்களின் புத்தகமான’ புனித வேதாகமத்தை வாசிப்பதால் நமக்கு அளவிடற்கரிய நன்மையுண்டு என்று அடிக்கோடிட்டுக் கூறலாம். வேதாகமம் ஒரு மனிதனை சிறந்த மனிதனாக ஆக்கும் வழியுடையது, வளமுடையது, வல்லமையுடையது. புத்தகங்களில் பல வகைகள் (Genres) இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, உரைநடை, கவிதை, கதை, சாகாசம், வரலாறு, சமூகவியல், வாழ்க்கை வரலாறு, அறிவுரை, தத்துவம், தர்க்கவியல் போன்றவற்றைக் கூறலாம். சங்கீதங்களின் புத்தகம் உங்கள் உணர்வறிவிற்கு (Emotional Intelligence) உவகையும், உந்துதலும் தரும் கவிதைகளின் தொகுப்பு. ஆஹா, எத்தனை வகையான பாடல்கள்! மெட்டமைக்கக்கூடிய, பல்வேறு அனுபவங்களைத்தரும் பாடல்களாக சங்கீதங்கள் இருக்கின்றன. ‘வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர். அவரே மகிமையின் ராஜா’ (சங்கீதங்கள் 24:9-10)

இப்பொழுது உங்களுக்கு ஒரு சிறிய பயிற்சியளிக்க விரும்புகிறேன். நியாயாதிபதிகளின் புத்தகம் 4 மற்றும் 5ம் அத்தியாயங்களை அடுத்தடுத்து வாசியுங்கள். அவ்வாறு வாசித்தப்பிறகு உங்களுக்கு என்ன தோன்றுகிறது? இரண்டு அத்தியாயங்களுக்கிடையில் இருக்கும் ஒற்றுமையும், வேற்றுமையும் என்னவென்று நினைக்கிறீர்கள் இஸ்ரவேலர் (?) பல ஆண்டுகள் தங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கானானியப் போரில் வென்ற (?) சம்பவத்தை இரண்டிலும் வாசிக்கிறோம். நான்காவது அத்தியாயம் உரைநடை வடிவிலும், ஐந்தாவது அத்தியாயம் பாடல் வடிவிலும் இருக்கக் காண்கிறோம். சில பகுதிகளைப் பொறுத்தவரை கவிதை வடிவம் உரைநடை வடிவத்தின் விளக்கமாக இருப்பதைப் பார்க்கிறோம். உண்மையில் வென்றது கர்த்தர் என்று நமக்குத் தெரியவருகிறது (நியாயாதிபதிகள் 5:20-21) தெபோராள் சரியாகத்தான் பாடுகிறாள்!

யாத்திராகமம் 15ல் அருமையான வேதாகமக் கவிதையை நாம் காண்கிறோம். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தாங்கள் விடுதலையடைந்ததைக் கொண்டாடும் வெற்றிப்பாடலது (Song of Triumph) 2சாமுவேல் புத்தகத்தில் பேரரசன் தாவீதின் அரியனையைப் பிடித்துக்கொள்ள அவருடைய மகன் அப்சலோம் அடுத்தடுத்து செய்த சூழ்ச்சிகளைப் பற்றி வாசிக்கிறோம். எத்துணை விறுவிறுப்பான கதைவடிவில் ஒரு வரலாற்று சம்பவம் சொல்லப்படுகிறது! நீதிமொழிகள் புத்தகம் அறிவுரைக் கருவூலமாகவும், பிரசங்கி புத்தகம் மற்றும் யோபு புத்தகம் ஞானப்பெட்டகமாகவும் திகழ்கின்றன. வாழ்க்கையின் பொருளென்ன எனும் கேள்விக்கு பலகோணங்களிலிருந்து தரப்பட்டுள்ள பதில்கள் யோபு, பிரசங்கி புத்தகங்களில் இடம்பெற்றிருக்கின்றன. ‘பிறக்கு ஒரு காலமுண்டு’ என்று துவங்கி ‘சமாதானம் பண்ண ஒரு காலமுண்டு’’ என்று

நிறைவடையும் வசனங்கள் 'ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதற்கென்று ஒருவரும் இவ்வுலகிற்கு அனுப்பப்படவில்லை' எனும் அற்புதமான செய்தியை உள்ளடக்கியிருக்கிறது (பிரசங்கி 3:2-8) 'ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்' என்று ஆரம்பித்து 'பரலோகராஜ்யம் அவர்களுடையது' என்று நியைவடையும் எட்டு வசனங்களில் ஆசீர்வதிக்கப் பட்டவர்களின் 8 பண்புகளை (Characters) நாம் வாசிக்கிறோம். வேதாகம விளக்கவுரை ஆசிரியரான மேத்யூ ஹென்றி 'இயேசுவே, உலக அளவுகோல்களைவிட உமது அளவுகோல்கள் எவ்வளவு உயரியவையாக இருக்கின்றன! என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சந்தைவெளியில் இரு சிறுவர் குழுக்கள். ஒன்று திருமணப் பாடலை இசைக்கிறது. இன்னொன்று ஒப்பாரிப் பாடலை இசைக்கிறது. 'நீங்கள் ஏன் ஆடவில்லை?' என்று முதல் குழு கேட்கிறது. 'நீங்கள் ஏன் அழவில்லை?' என்று இரண்டாவது குழு கேட்கிறது. இத்தகைய பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்களாம் பரிசேயரும், நியாயசாஸ்திரிகளும் யார் சொன்னது? சிறந்த ஆசானாம் (Master Teacher) இயேசுதான். அவர்தம் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. அவருடைய உரையாடல்களும் அவ்வாறே. எந்த இலக்கியப் பிரிவில் (Genres) இவற்றை சேர்ப்பது. தனித்தன்மை வடிவ இலக்கியம் வேதாகமத்தில் பரவலாகக் காணப்படுகிறது. (லூக்கா 7:31-32)

எனக்கன்பான மாணவச் செல்வங்களே! நல்ல நூல்களை விரும்பி வாசியுங்கள். வன்முறை ஆபாசத்தைத் தவிருங்கள். எதை வாசித்தாலும் வேதாகமம்தான் மிக முக்கியமான நூல் என்பதை மறவாதீர்கள். திருவசனங்களை நன்கு புரிந்துகொள்ள வேதாகமம் சொல்லகராதிகள் ஒத்த வாக்கியங்கள் மற்றும் விளக்கவுரைகளைப் பயன்படுத்துங்கள். பிரசங்கக் குறிப்புகளும் மிகவும் பயனுள்ளவை. 'வேதத்திலுள்ள அதிசயங்களைப் புரிந்து கொள்வதற்கு' தேவன் உங்களுடைய மனக்கண்களையும் திறந்தருள்வாராக! ஆமென்!!

## குடும்ப மனமகிழ்ச்சி முகாம்

இடம் : **கிருபையின் ஆலயம்,** தோப்புப்பட்டி
நாள் : **14-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய**
தேவசெய்தி : **சகோ. S. ஜெபராஜ்** President, Graceministries

**தொடர்பிற்கு : 9486266655, 9442120257**

இடம் : **கிருபையின் ஆலயம்,** புல்லக்கவுண்டன்பட்டி
நாள் : **18-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய**
தேவசெய்தி : **Dr. P.T.R. தியோப்பிலஸ் ரோஜர்**
**சகோ. S. ஜெபராஜ்**

**தொடர்பிற்கு : 9489265719, 9442120257**

இடம் : **கிருபையின் ஆலயம்,** N. திருவேங்கிடபுரம்
நாள் : **25-11-2012 காலை 10 மணி முதல் மாலை 4 மணி முடிய**
தேவசெய்தி : **Dr. P.T.R. தியோப்பிலஸ் ரோஜர்**
**சகோ. S. ஜெபராஜ்**

**தொடர்பிற்கு : 942919025, 9442120257**



# தேவனைத் துதிப்போம் வாருங்கள்

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

**கண்ணாண்டிவிளை** – சகோதரி. மேரி அவர்களுக்கு கர்த்தர் வேலையைக் கொடுத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

Arts College Hostel - சகோதரி பதுமராகம் அண்ணனுக்கு வேலை கிடைத்ததற்காக சகோதரிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

Engg. College Hostel - சமையல் செய்கிய அம்மாவுக்கு நல்ல சுகம் கிடைத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

**செபத்தையாபுரம்** – பூரணம் என்ற தங்கையின் திருமணத்தைக் கர்த்தர் நடத்திக் கொடுத்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

நமது ஆலயத்தில் அருகில் இருக்கும் முதியோர் இல்லத்திலிருந்து புதிதாக ஆத்துமாவை கொண்டு வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : தூத்துக்குடி ரூரல் – தாளமுத்துநகர்

Bro. Premkumar மகன் திருமண காரியத்தை கர்த்தர் மகளுக்கு சுகமான பிரசவத்தை வாய்க்கச் செய்தார். சகோதரி ரூசா அவர்களது வீடு சிறப்பாக கட்டி முடிக்க கர்த்தர் உதவி செய்தார் பிரின்ஸ் அண்ணன் மகளுக்கு சுகமான பிரசவத்தை கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **பழைய அப்பனேரி**

**பழைய அப்பனேரி** – 9வது ஆலய பிரதிஷ்டை பண்டிகையை தேவன் ஆசீர்வாதமாக நடத்தி தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

**திருப்புளியங்குடி** – ஜெபவீடு கட்டுமான பணி தொடர்ந்து நடக்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கு நன்றி சொல்லுவோம். சகோதரி. ஜெயா அவர்களுக்கு நல்ல ஆண் குழந்தையை தந்ததற்காகவும் சுகபிரசவத்திறகாகவும் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை**

**கோரம்பள்ளம்**– இங்கு பெண்கள் ஜெபம் ஆரம்பிககப்பட கர்த்தர் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம். சகோதரி. காயத்திரிக்கு விபத்து ஏற்பட்டு காலில் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **அய்யனேரி**

இங்கு சிறுவர் முகாமை தடையில்லாமல் கர்த்தர் சிறப்பாய் நடத்தி தந்ததற்காக தேவனைத் துதிப்போம். சகோ. கோபி அக்காள் எஸ்தருக்கு கர்த்தர் சுகபிரசவத்தில் நல்ல பெண் குழந்தையை தந்ததற்காக தேவனைத் துதிப்போம். **புளியங்குளம்** – சகோ. ஜெயசிங் கிரேஸ் இவர்கள் வீட்டை கட்டுவதற்கு எல்லாத் தேவைகளை சந்தித்தற்காக தேவனை துதிப்போம்.

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட தங்கை அர்ச்சனாவுக்கு தேவன் விடுதலை

கொடுத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

**அப்பைநாயக்கர் பட்டி** – சகோதரி உமா மகேஷ்வரியின் திருமணத் தடைகளை மாற்றி கர்த்தர் திருமண காரியத்தை வாய்க்கச் செய்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

**நொச்சி குளம்** – சகோதரன் பெரியசாமி கோயில் பூசாரி. இவர் குடும்பத்தில் நடைபெற்ற ஜெபத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார். இப்பொழுது ஜெபத்தில் கலந்து கொண்டு தேவனுக்கு சாட்சியாக கர்த்தர் மாற்றியிருக்கிறார். இதற்காக தேவனைத் துதியுங்கள். சகோதரன் பலமுருகன் படிப்பை தொடங்குவதற்க தேவன் தடைகளை மாற்றியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஆலத்தூர்** – சகோதரன் வைரமுத்து வீட்டின் தொழுவத்திலுள்ள 10க்கும் மேற்பட்ட வெள்ளாடுகளை திருடர்களிடமிருந்து கர்த்தர் பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **மைப்பாறை**

சகோதரர் சண்முகக்கனி மகன் திருமணக் காரியம் எவ்வித தடையின்றி நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம். **நரிக்குளம்** – முத்து என்ற சகோதரிக்கு மார்பில் உள்ள கட்டியை கர்த்தர் அகற்றி நல்ல சுகம் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம். **மைப்பாறை** – ஜெயமணியம்மாள் என்பவரின் மகன் மருமகள் குடும்பத்தில் தேவன் சமாதானத்தை கட்டளையிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

சகோதரர் ஜேம்ஸ் என்பவரின் மகள் அட்சயாவுக்கு சிறுநீரக பிரச்சனையில் இருந்து கர்த்தர் தந்த சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **சிவகாசி**

பல ஆண்டுகளாக பிரிந்து இருந்த திருமதி ஸ்டெல்லா அவர்களின் குடும்பம் மீண்டும் இணைக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம். செல்லப்பா நகரில் நடைபெற்ற ஜெபக்குழுவில் இயேசுவை அறியாத பிராமண சகோதரி ஒருவர் ஜெபக்கூட்டத்தை தங்கள் வீட்டில் வைத்து நடத்துங்கள் என்று கூறியிருக்கிறார். இதற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **சாத்தூர்**

**ஓ. மேட்டுபட்டி** என்ற கிராமத்தில் புதிதாக வீட்டு ஜெபக்கூட்டம் நடைபெறுவதற்கு தேவன் தந்த திறந்த வாசலுக்கு தேவனைத் துதிப்போம்.

**சாத்தூர்** – கன்னியம்மாள் என்ற சகோதரிக்கு பயத்தை மாற்றி இரவில் நல்ல நித்திரையை தேவன் தந்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **7000 பண்ணை**

தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற வாலிபர் வெற்றிமுகாமில் வாலிப சகோதரிகள் பரிசுத்தமுள்ள ஜீவியம் செய்வதற்கு தீர்மானம் எடுத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தொட்டம்பட்டி**

ஜோதிமணி கீழே விழுந்ததினால் ஏற்பட்ட முழங்கால் வலியிலிருந்து தேவன் விடுதலை கொடுத்ததற்காக துதியுங்கள்.

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி**

23-9-2012 அன்று நடந்த சிறுவர் முகாமில் தேவன் 200 சிறுபிள்ளைகளையும்



மற்றும் பெரியவர்கள் வந்து கலந்து கொள்ள உதவி செய்தார். தேவனைத் துதியுங்கள். தேவன் மிஷனெரி குடும்பத்தை எல்லாத்தீங்குக்கும் விலக்கி காத்ததறகாக துதியுங்கள்.

### அரியலூர் மாவட்டம்

பணித்தளம் : **மிஸ்பா**

**வெத்தியார்வெட்டு** சபைக்கு தேவன் புதிதாக 4 வாலிபர்களை தந்ததற்காக துதியுங்கள். **குண்டவெளி** என்ற கிராமத்தில் ராஜேஸ்வரி என்ற சகோதரி வீட்டில் ஜெபக்கூட்டம் தொடங்க தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

### திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **பொங்கலூர்**

**சின்னக்காட்டூர்** இந்திரா காலனியில் நடக்கும் ஜெபக்கூட்டத்தில் சுமதி என்ற சகோதரி கலந்து கொள்ள தடைகள் காணப்பட்டது. தற்போது தேவன் எல்லாத் தடைகளையும் நீக்கி போட்டதால் தேவனைத் துதியுங்கள். தொட்டிப்பாளையத்தில் சகோதரி. ஜெபலீலா குடும்பத்துடன் வண்டியில் போகும் போது விபத்து ஏற்பட்டது. ஆனால் எந்வொரு ஆபத்தும் இல்லாமல் தேவன் காத்தபடியால் தேவனைத் துதியுங்கள்

### திருச்சிமாவட்டம்

பணித்தளம் : **மணப்பாறை**

சகோதரர் சாந்தகுமாருக்கு திருமணம் நடந்து 4 வருடங்களுக்கு பிறகு ஆண் குழந்தை பிறந்தது தேவனைத் துதியுங்கள்.

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அழகப்பபுரம்**

2-10-2012 அன்று விசுவாசபுரத்தில் நடைபெற்ற சிறுவர் முகாமில் 400 சிறுபிள்ளைகள் கலந்து கொண்டதற்காக தேவனை துதியுங்கள். தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **திருவேங்கடம்**

**திருவேங்கடம்** ஆராதனையில் வருகிற புதிய ஆத்துமாக்களுக்காக தேவனைத் துதியுங்கள். சின்னக்காளான்பட்டியில் நடைபெறுகிற ஆராதனைக்கு வருகிற புதிய ஆத்துமாக்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

## பணித்தளங்களுக்காக முழங்காலில்...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **திருக்களூர்**

சகோதரி எஸ்தர்கனி அவர்கள் வீடு கட்டுவதற்கு தேவைகள் சந்திக்கப்படவும் அரசாங்க வேலை கிடைக்கவும் ஜெபிக்கவும்.

**சொக்கனூர் :** சகோதரி எப்சிபா அவர்கள் குடும்பத்தில் உள்ள பிரச்சனை மாறவும் குடும்பத்தில் சமாதானம் கிடைக்கவும் எப்சிபா அப்பா வடிவேலு இரட்சிக்கப்படவும் காலில் உள்ள எலும்பு முறிந்துவிட்டதால் ஆப்ரேஷன் செய்திருக்கிறார்கள். பரிபூரண சுகம் கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்**

**பிரமுத்துவிளை :** சகோதரி. பொன்னுத்தாய் என்ற சகோதரியின் நிலம் அரசடியில் உளளது. (9 சென்ட்) அது சீக்கிரமாக கிடைக்கவும் பேங்கில் உள்ள நகைகள் இவர்களுக்கு

கிடைக்கவும் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவம் ஜெபிக்கவும்.

சகோதரி. தேவகிருபை சகோதரன் மோசஸ் இவர்களுக்கு சரீரத்தில் இருக்கிற முட்டுவலி கால்வலியால் நடக்க முடியவில்லை தேவன நல்ல சுகத்தை கொடுக்கவும் ஜெபிக்கவம் சகோ. மதிக்கு திருமணம் தடையில்லாமல் நடக்க வேண்டும் இதற்காக ஜெபிக்கவும். சகோதரி அனிட்டா, மேரி வசந்தி, ஜெபா, பாலின்கமல், பிரியா இவர்களின் திருமணத்திற்காக ஜெபிக்கவும். ராஜசேகர், பொன்பிரேம்குமார், முருகன், தர்ஷன், அவர்னா இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கவும்.

பணித்தளம் : **பேட்மாநகரம்**

**பேரூர் –** சகோதரி. காசிராஜன் இவர்கள் வீடு கட்டுவதற்கான பணத்தேவைகள் சந்திக்கப்படவும், சகோதரன தங்கப்பாண்டி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையாகவும் ஜெபிக்கவும். சகோதரன் வைகுண்டம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் கணவன் மனைவிக்குள் இருக்கிற பிரச்சனைகள் மாறவும் இருவரும் இணைந்து வாழவும் இதற்காக ஜெபிக்கவும். சகோதரி. செல்வி அவர்களின் திருமண காரியத்திற்கான பணத் தேவைகள் சந்திக்கப்படவும் இவர்கள் இயேசுவை உறுதியாக பிடித்து கொள்ளவும் இதற்காக ஜெபிக்கவும்.

**முத்துசாமிபுரம்** – சகோதரி. செல்விக்கு காணப்படுகின்ற பயத்தின் ஆவியிலிருந்து விடுதலையாகவும் தாயார் வள்ளியம்மாள் கீழே விழுந்து எலும்பு முறிவால் நடக்க முடியாமல் இருக்கிறார்கள். தேவன அவர்களுக்கு பரிபூரண சுகத்தை கொடுக்கவும் இதற்காக ஜெபிக்கவும். **சுந்தரலிங்கநகர்** – சகோ. சந்திரசேகர் அவரது மனைவி 5 வருடமாக பிரிந்து வாழ்ந்து கொண்டிருககிறார்கள். இவர்களை தேவன் இணைத்து வைக்க வேண்டும் இதற்காக ஜெபிக்கவும். **பேட்மாநகரம்** – சகோதரி. சிவா V.A.O. தேர்வு எழுதியிருக்கிறான். இந்தத் தேர்வில் பாஸ் பண்ணவும் தேவனுடைய காரியங்களில் முதன்மையாக இருக்கும்படியாக ஜெபிக்கவும்.

பணித்தளம் : **புதுக்கோட்டை**

சகோ. எஸ்றா ஜோசப் அவர்களது இல்லத்தில் நடைபெறுகிற அற்புதத்தின் மாலையில் கலந்து கொள்கிற குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட சகோதரி. பாக்கியசீலிக்கு கர்ப்பப்பையில் ஆப்ரேஷன் நடைபெற்றது. கர்த்தர் பூரண சகம் கொடுக்க இங்கு நடைபெறகிற பெணகள் ஜெபத்தில் கலந்து கொள்கிற பெண்களுக்காக.... சிறுவர் முகாம் நடைபெற ஏற்ற இடம் கிடைக்கவம் ஜெபிக்கவும்.

**அத்திமரப்பட்டி** – சகோதரி. பியூலா, பிரபா இவர்களது படிப்பை கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோதரி கனகாவிற்க கர்த்தர் சுகபிரசவத்தை கொடுக்கவும் ஜெபிப்போம்.

**வாகைக்குளம்** – இங்கு நடைபெறுகிற பெண்கள் கூடுகையில் கலந்து கொள்ளுகிற பெண்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ, புறமத தெய்வங்களை, ஜோதிடர்களை தேடுவதை விட்டுவிட ஜெபிப்போம்.

**மீன்வளக் கல்லூரி விடுதி** – முதல் வருடம் படிக்கிற மாணவிகள் தவறாது ஜெபத்தில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

சகோதரி. தேவபாக்கியம் அவர்களுக்கு தேவன் ஏற்ற துணையை தரும்படியாகவும், சகோதரன் சனிராஜ் +2வில் நல்ல மதிப்பெண்கள் எடுப்பதற்காக ஜெபிப்போம்.

**திருப்புளியங்குடி** – இங்கு ஜெபவீடு கட்டுமான பணி தொடர்ந்து நடக்க தடைகள்



மாற ஜெபித்துக் கொள்ளுங்கள். இங்கு ஜெபிக்கிற பிள்ளைகளுக்காக மலதி, புணத, சிலட், சண்முகசுந்தரி, வசந்தா, ராதா, ஆனந்தி இவர்கள் ஜெபத்தில் வளர ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பணித்தளம் : **அப்பனேரி**

சகோதரன் பாலு படுத்த படுக்கையில் இருக்கிறார். தேவன் அவரை எழும்பி நடக்கச் செய்ய ஜெபிப்போம். சகோதரர் செல்வராஜ் எய்ட்ஸ் நோயிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம். அநேக சிறுவர்கள், வாலிபர்கள் ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள். புது ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்க ஜெபிப்போம்.

**காமநாயக்கன்பட்டி** – சகோதரி ஹரி தீபாவுககு ஆஸ்துமா நோயிலிருந்து விடுதலை பெற... ஹரி தீபா தம்பி வலிப்பு வியாதியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம். **வேலப்பட்டி** – ஆரோக்கியராஜ், அன்புராணி இவர்கள் செய்கிற வேலையை ஆசீர்வதிக்க, மேலப்பட்டி பள்ளிகூடத்திற்கு நல்ல ஒரு ஆசிரியர் கிடைக்க... சகோதரி. கல்யாணி அவர்கள் குடும்பம் முழுமையாக இரட்சிக்கப்பட ஜெபிப்போம். **சித்திரம்பட்டி காலனி** – சகோதரர் ராமசாமி அவர்களுக்கு இருதய பெலவீனம் நீங்கி பரிபூரண சுகம் உண்டாக ஜெபிப்போம்.

**சத்திரப்பட்டி** – தேவபிச்சை அவர்களுக்கு வயிற்றிலுள்ள வலி பூரண சுகம் கிடைக்வும், சகோ. பூபதிக்கு இரத்தக் குறைவினால் உண்டாயிருக்கிற பெலவீனம் மாற....

**புதுஅப்பனேரி** – சகோதரி. குருவம்மாள் குடும்பத்தில் உள்ள கடன் பிரச்சனை மாறி முழு குடும்பமும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கரிசல்பட்டி** – சகோ. சுப்புராஜ் என்பவரின் மகள் குடும்பத்தில் பிரச்சனை மாற....

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல், தாளமுத்துநகர்**

சகோதரி. மேரி கிட்னி பிரச்சனையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களுககு பரிபூரண சுகம் கிடைக்கவும் சகோதரி. லில்லி அவர்கள் மகளுக்கு பிரசவத்தில் இருக்கிற பிரச்சனையை மாற்றி கர்த்தர் சுகபிரசவத்தை கொடுக்கவும்....

சகோதரி. விஜி அவர்களுடைய பிள்ளைகளின் மேல்படிப்பை கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோதரி. மல்லிகா அவர்களின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும்...

**தாளமுத்துநகர் பகுதியில்** ஊழியங்களை தாங்குகிற நபர்களை கர்த்தர் இன்னும் எழுப்பித்தர தூத்துக்குடி பகுதிக்கு கர்த்தர் நல்ல மழையைத் தர குடி தண்ணீர் பிரச்சனையை மாற்ற ஜெபிபபோம். சகோதரர் ரவிக்குமார் அவர்கள் குடும்ப பிரச்சனையால் மருந்து குடித்து சிகிச்சையில் உயிர்பிழைத்து வீட்டில் இருக்கிறார். இவர்களுக்கு தேவன் பரிபூரண சுகத்தை கொடுக்கவும் இவர்கள் குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும்....

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

சகோதரி. ஜெனிற்றா பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப... ஜெபக்குழுவிற்கு வருகிற வாலிப பெண்கள் யாவரும் கர்த்தருக்குள் பலப்பட, சாட்சியாய் செயல்பட ஜெபிப்போம். Arts College, Engg. College Hostel இரண்டிலும் படிக்கிற மாணவிகள் கர்த்தரால் வழிநடத்தப்பட, படிப்பு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**ஏற்காடு தெரு** – இங்கு புதிய வாலிப பெண்களைக் கர்த்தர் கொண்டுவர, வருகிற தங்கைகளைக் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம்**

வாலிப பெண்கள் கர்த்தருக்குள் வளர படிக்கிற பிள்ளைகளுக்கு கர்த்தருடைய ஞானம் கடந்து வர ஜெபிப்போம். டேனி என்ற தங்கையின் குடும்பத்திற்கு தேவன் ஒரு

வீட்டை கட்டிக் கொடுக்க, ஜெபக்குழுவிற்கு வரும் பிள்ளைகளுக்கு தேவன் நல்ல ஞானத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

**சக்கம்மாள்புரம்** – சகோதரி. சிவத்தரசி மகன் பொன்ராஜ் இரட்சிக்கப்பட.... தங்கை மாரி சகோதரியின் கடன் பிரச்சனை மாற ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஏரல்**

சகோ. சுந்தரர்ராஜ் அண்ணன் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட.... நல்ல பெலன் கிடைக்க... கிளாரியா அக்கா குடும்பம் கர்த்தருக்குள் பலப்பட... ஜெபத்திற்கு வருகிற பாட்டியைக் கர்த்தர் பெலப்படுத்த ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

சகோதரி மரியசொர்ணம் கண்வலி மாறி நல்ல பார்வை கிடைக்கவும், சகோதரி ஜெகஜோதி கண் பார்வை கிடைக்கவும், சகோதரி சரண்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஜெபிப்போம். ராஜாராமன்நகர் – சகோதரி. பானுமதி நாசரேத்தில் இருக்கும் 3 செண்ட் இடம் விற்கப்படவும் சகோதரர் ராக்கெட் ராஜா இரட்சிக்கப்படவும் இந்த கிராமத்தில் நடைபெறுகிற ஆராதனையில் அநேக ஆத்துமாக்களை தேவன் கொண்டுவர ஜெபிப்போம். திருவனந்தபுரம் – சகோதரர் கந்தசாமி (போலீஸ்) வீட்டுவேலை சீக்கிரம் கட்டிமுடிக்கப்பட்டு இங்கு வாரத்தில் ஒருமுறை வீட்டுக் கூட்டம் நடத்தப்படவும் சிறுவர் கூடுகை நடத்தப்படவும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

**தளவாய்புரம்** – இந்த கிராமத்தில் மூன்றாவது ஆராதனை ஆரம்பிக்கப்படவும் தேவன் நல்ல இடத்தையும் அநேக ஆத்துமாக்களையும் கொண்டு வர ஜெபிப்போம்.

**ஆண்டாள்நகர் பணித்தளத்தில்** நடைபெறஉள்ள டிசம்பர் மாதம் குடும்ப முகாம், ஆலய பிரதிஷ்டை ஆசீர்வாதமாய் நடைபெறவும் பணத்தேவைகள் சந்திக்கப்படவும்....

பணித்தளம் : **தாதன்குளம்**

சகோதரி. மங்களம் விபத்தில் இறந்து போனார்கள். கர்த்தர் அவர்கள் கணவருக்கும், பிள்ளைகளுக்கும் ஆறுதல் கிடைக்கும்படியாகவும் ஜெபிப்போம். சகோதரர் செல்லையா அவர்கள் நமது மிஷனெரி பிள்ளைகளோடு எந்த பிரச்சனை பண்ணாதபடி மணந்திரும்பி ஆலயத்திற்கு கடந்து வர ஜெபிப்போம்.

**அரசகுளம்** – சகோ. செல்வகுமார் இவருக்கும் மனைவிக்கும் இருக்கிற எல்லா பிரச்சனைகள் மாறவும் தேவன் இவர்களை இணைத்து வைக்கவும் ஜெபிப்போம்.

**கருங்குளம்** – சகோதரி. பாமி இவர்கள் கணவனை இழந்து நிற்கிறார்கள். அவர்களுக்கு பயத்தின் ஆவி நீங்கும்படியாகவும் கவலைகள் மாறும்படியாகவும் தேவன் இவர்களுக்கு ஆறுதல் கொடுக்கவும் ஜெபிப்போம். சகோதரி. சுலோசனா இவர்கள் சிறுவர் ஜெபம் நடத்த இடம் கொடுத்து இருக்கிறார்கள். இவர்கள் இரட்சிக்கப்படும் படியாகவும் குடும்பம் ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **அய்யனேரி**

சகோ. அந்தோணி மகள் கிருபா நன்றாக வாய் பேச அடிக்கடி வருகிற பெலவீனம் மாற ஜெபிப்போம். ஆலயம் கட்டுவதற்கு தடையாய் இருக்கிய நபர்களை கர்த்தர் சந்திக்கும்படியாகவும் ஜெபிப்போம். சகோ. சுப்பிரமணி குடிப்பழக்கத்திலிருந்து மாறவும் குடும்பத்தில் சமாதானம் உண்டாகவும் பிள்ளைகள் நன்றாக படிக்கவும் குடும்பமாக இரட்சிப்புக்குள்ளாக வரவும் ஜெபிப்போம்.

**புளியங்குளம்** – சகோதரி. தனம்மாள் மகன் வெங்கடேஷ் குடிப்பழக்கத்திலிருந்து



மாறவும் திருமணம் தடையில்லாமல் நடக்கவும் ஜெபிப்போம். தாதன்குளம் – சகோதரி. செல்வி இவர்களுடைய கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை அடையும்படியாகவும் இவர்களுடைய மனைவி செல்வி ஆண்டவருக்குள் பலப்பட ஜெபிப்போம். சகோ. செல்வம் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தினால் நடக்க முடியாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு தேவன் நல்ல சுகத்தை கொடுக்கவும் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**க. காலனி –** சகோதரி சோபா மகன் 6 மாத குழந்தை அடிக்கடி உடல் நலம் சரியில்லாமல் ஆகிறது கர்த்தர் பிள்ளைக்கு நல்ல சுகத்தை தரும்படியாக ஜெபிப்போம்.

**சிப்பிப்பாறை** – சகோ. ஏசுதாஸ் நிரந்தரமாக நல்ல வேலை கிடைக்க... இரட்சிப்புக்குள் நிலைத்திருக்க, ஊழியத்திற்கு உறுதுணையாய் இருக்க ஜெபிப்போம்.

**புதூர்** – இங்கு சிறுவர் கூடுகைக்கு வருகிற பிள்ளைகள் இரட்சிக்கப்பட தொடர்ந்து சிறுவர் கூடுகை தடையில்லாமல் நடக்கவும் ஜெபிப்போம்.

**சங்கரபாண்டியபுரம்** – சகோ. அழகர்சாமி சென்பகவள்ளி மகன் மைக்கில்ராஜ் மகள் அன்புசெல்வி, ஆனந்தி இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம். சகோதரி. காளியம்மாள், நரம்பு தளர்ச்சியிலிருந்து தேவன் நல்ல சுகத்தை கொடுக்கவும் இந்த தாயார் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம். சகோ. வேல்சாமி மகன் மைக்கேல்ராஜ் மனநிலை சரியில்லாமல் இருக்கிறான். இந்த சகோதரனுக்கு கர்த்தர் நல்ல சுகம் தர ஜெபிப்போம்.

## விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி**

வியாதியிலிருந்து சுகம் கிடைத்த சகோ. ஈஸ்வரன் பின்மாற்றம் அடைந்து இருக்கிறோம். அவர் மீண்டும் கர்த்தரைத் தேடவும் ஆலயத்திற்கு கடந்து வரவும் ஜெபிப்போம். 5 பேர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்குள் பெலப்படவும், ஜெபிப்போம்.

எப்சிபா, பீட்டர் பரிட்சையில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க ஜெபிப்போம். ஆலயத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு ஜெபிப்போம்.

பணித்தளம் : **மைப்பாறை**

சபை மக்கள் ஒருமனதோடு ஆலயத்திற்கு வரவும் புது ஆத்துமாக்கள் ராசு குடும்பம் குருவம்மாள் சரசு இவர்கள் தொடர்ந்து ஆலயத்துக்கு வர ஜெபியுங்கள்.

குகன்பாறை – சம்முகக்கனி ஐயா அவர்கள் மெழுகுவர்த்தி தொழில் ஆசீர்வதிக்கப்பட உடல்நலம் பெறவும் பொன்னுத்தாய் குடும்பம் ஜெபத்தில் கலந்து கொள்ள ஜெபிக்கவும்.

பணித்தளம் : **பழைய செந்நெல்குளம்**

சகோ. இம்மானுவேல் ராஜாவின் மனைவிக்கு சுகப்பிரசவம் உண்டாக, சரஸ்வதி சகோதரிக்கு உடல் ஆரோக்கியம் கிடைக்க ஜெபியுங்கள்.

**பிள்ளையார்குளம்** – சகோ. ராமமூர்த்தி – செல்வி இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபியுங்கள். மாரியப்பன், முத்து, இருளப்பன், முத்துலெட்சுமி இவர்கள் ஆலய ஆராதகைளில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். சகோதரர் மொட்டையன் மனைவி பிள்ளைகள் ஆலயத்திற்கு கடந்து வரவும், மகள் வாய் பேசாமல் இருக்கிறாள். வாய் பேசுவதற்கு தேவன் உதவி செய்யவும், கர்த்தரின் நாமம் மகிமைப்பட ஜெபியுங்கள்.

**புதுசெந்நெல்குளம்** – சகோதரி. தேவி குடும்பத்தின் பிள்ளைகள் ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்ள ஜெபியுங்கள். காளீஸ்வரி சகோதரியின்

கணவர் மரணம் அடைந்ததால் ஆலயத்திற்கு வருவதற்கு பயப்படுகிறார்கள். தேவன் பயத்தை மாற்றவும், ஆராதனையில் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள். அபினேஷ்வரன், மாரீஸ்வரி இவர்களின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

**கண்ணார்பெட்டி –** இக்கிராமத்தில் ஆராதனை நடத்துவதற்கு ஏற்ற இடம் கிடைக்க ஜெபியுங்கள். சத்தியா, வேல்முருகன், முருகன், பொன்னுத்தாய் ஆராதனையில் கலந்துகொள்ள ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சிவகாசி**

அக்டோபர் 24 புதன்கிழமை நடைபெறும் வாலிபர் வெற்றி முகாமில் அநேக வாலிபர்கள் கலந்து கொள்ள ஜெபியுங்கள். புதூர், ஆசாரி காலனி, இந்திராநகர் – சிறுவர் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்படவும், அநேக பிள்ளைகள் கூடி வர ஜெபியுங்கள்.

**ஈஞ்சார்** – பவுல் ஆண்டனி பாரா மெடிக்கல் கல்லூரியில் திங்கள்கிழமை தோறும் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. சரஸ்வதி, நாகலெட்சுமி அவர்கள் ஞானஸ்நானம் எடுப்பதற்கு தடைகள் மாற ஜெபியுங்கள்.

**பாரதிநகர்** – சகோதரி. ஸ்டெல்லா மேரிக்கு கர்த்தர் சுகமான பிரசவத்தை கொடுக்க, முத்துபிரின்ஸுக்கு படிப்பிற்பேற்ற நல்ல வேலை கிடைக்க ஜெபியுங்கள். **கோபால்நகர்** – சகோதரி. நாகலெட்சுமி அவர்களுடைய சரீர பெலவீனம் மாற, பெலவீனப்படுத்துகிற பொல்லாங்கனுடைய கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள். **N.G.O. காலனி** – சகோதரி. செலஸ்டா அவர்களுக்கு கர்த்தர் குழந்தை பாக்கியத்தை கட்டளையிட ஜெபியுங்கள்.

**அம்மாபட்டி** – கிராமத்தில் சிறுவர் ஊழியம் செய்வதற்கு திறந்த வாசல் உருவாக, போக்குவரத்து வசதிகள் அமைய ஜெபியுங்கள்.

**ராஜபாளையம்** – சகோதரர் இஸ்ரவேல் என்பவரின் மனைவி கணவனுடன் இணைந்து வாழ ஜெபியுங்கள்

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

அந்தோணி என்ற சகோதரர் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபியுங்கள். சபைக்கு புதிதாக வரும் நபர்கள் இரட்சிக்கப்படவும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள். மாரிச்சாமி, ஜாண்பீட்டர், ரூபி, அருள்ராஜ் இவர்களுக்கு சரீரத்தில் நல்ல சுகம் உண்டாக ஜெபியுங்கள். லிங்கம்மாள், காளீஸ்வரபாண்டி இவர்கள் குடும்பமாய் இசைந்து வாழ ஜெபியுங்கள். சகோதரி மகேஷ், செல்விக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதித்து கொடுக்க ஜெபியுங்கள். சகோதரி. போதும்பொன்னு, பாக்கியம் இவர்களுக்கு சுகபிரசவத்தை தேவன் கட்டளையிட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

**மாலையூரணிப்பட்டி** – சகோதரர். தங்கப்பாண்டி மது பழக்கத்திலிருந்து விடுவிக்கப்படவும், குடும்பத்தில் சமாதானம் கிடைக்கவும், தேவனை கண்டு கொள்ளவும், ஜெபத்திற்கு எதிர்ப்பு மாற ஜெபியுங்கள். பிரிந்து வாழ்கின்ற மாரிமுத்து சந்தணமாரி இவர்கள் இணைந்து வாழ ஜெபியுங்கள்.

**மல்லி** – சகோதரி. விக்டோரியா (விதவை) தனித்து வாழ்கின்றார்கள். வேலைக்கு செல்லமுடியாத சூழ்நிலை இருக்கிற இவர்களின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**கோப்பைநாயக்கன்பட்டி** – சகோதரி. மஞ்சுளாவின் பலசரக்கு கடை வியாபாரம் நன்றாக நடைபெற, ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் எடுப்பதற்கு தடைகள் மாற ஜெபியுங்கள்.



பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

புஷ்பம், ராஜா நாகலெட்சுமி இவர்கள் ஆலய ஆராதனைக்கு கடந்து வர ஜெபியுங்கள். சகோ. பாலமுருகனுக்கு புத்திசுவாதீனம் நீங்க ஜெபியுங்கள். சகோதரி பாலகிருஷ்ணம்மாள், பாக்கியம் இவர்களின் பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**ரெட்டியப்பட்டி** – சுஜா அவர்களின் குடும்பத்தில் சமாதானம் உண்டாக ஜெபியுங்கள். மாரியம்மாள் குடும்பம் முழுவதும் தேவனை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

**கீழச் செல்லையாபுரம்** – வசந்தா அவர்களின் காது நன்றாக கேட்கும்படி ஜெபியுங்கள். வேலம்மாள், லோகராஜ் இவர்களின் கஷ்டங்கள் நீங்க ஜெபியுங்கள்.

**கீழமேட்டூர்** – ஆவடியம்மாள் என்ற சகோதரிக்கு தேவன் கர்ப்பத்தின் கனியை ஆசீர்வதித்து கொடுக்க ஜெபியுங்கள்.

**கிருஷ்ணாபுரம்** – சகோதரன் பேச்சிமுத்துக்கு ஏற்ற துணை கிடைக்க ஜெபியுங்கள். கோமதி தாயாருடைய குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. சுப்புதாயின் கை, கால் வலியிலிருந்து தேவன் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **என். திருவேங்கிடபுரம்**

சகோதரன் அறிவழகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஆர். ரெட்டியபட்டி** – சகோதரி. பாண்டிச்செல்வி வீடு கட்டி முடிப்பதற்கு தேவன் கிருபை செய்யும்படி ஜெபியுங்கள்.சகோ. இளங்கோ மனைவி இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. வீரம்மாள் கால்வலியிலிருந்து தேவன் நல்ல சுகத்தை தரும்படி ஜெபியுங்கள். சகோதரி. மாரியம்மாவுக்கு கண்ணில் ஆப்ரேஷன் செய்திருக்கிறார்கள். நல்ல சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

**இராஜபாளையம்** – சகோதரர் ஈசாக்குக்கு விபத்தில் ஏற்பட்ட பெலவீனம் முழுமை யாக குணமடைந்து ஆலயத்திற்கு கடந்து வரவும், மருமகள் மகனுடன் இணைந்து வாழ ...

**கன்னித்தேவன்பட்டி** – கிராமத்தில் நல்ல மழையை தேவன் தரவும், அனுமதி பெற்ற இடத்தில் ஆலயம் கட்டுவதற்கு சீரமைப்பு பணி விரைவில் நடைபெற ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சாத்தூர் (ரூரல்)**

முத்துலெட்சுமி சகோதரி ஞாயிறு ஆராதனைக்கு கடந்து வர ஜெபியுங்கள். சகோ. கருப்பசாமி இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சகோ. வின்சென்ட் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று ஆலயத்திற்கு கடந்து வரவும், தேவன் ஒரு அற்புதத்தை செய்ய ஜெபியுங்கள். பதிதாக சந்திக்கப்பட்ட சகோதரி கார்த்திகா செல்வி தேவனை அறிந்து கொள்ளவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள். சகோதரி. மேரியின் கணவர் சபைக்கு வரும்படி ஜெபியுங்கள். சகோ. சந்தணகுமார் விசுவாசி ம்.சிசிசி. படித்திருக்கிறார். நல்ல வேலை கிடைக்கும்படி ஜெபியுங்கள். சகோ. செல்வம் என்பவர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். இவர்கள் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**நல்லான் செட்டிப்பட்டி** – மாலதி கணவர் பாலமுருகன் இரட்சிக்கப்பட்டு சபைக்கு கடந்து வர ஜெபியுங்கள். **ஆலம்பட்டி** – இவ்வூர் மக்கள் மதுபான பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ... **ஒத்தையால்** – சகோதரி. பழனியம்மாள் மகள் ஜெனிபர் கீழ்ப்படிகிற பிள்ளையாய் வாழவும், கெட்டவார்த்தைகளைப் பேசாமல் நாவை பாதுகாத்துக்கொள்ள தேவன் கிருபை செய்ய ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சிவசங்குபட்டி**

முத்துமாரி என்ற சகோதரிக்கு தேவன் நல்ல வீட்டை தரவும், சரீரத்தில் காணப்படும்

பெலவீனங்கள் மாறவும், குடும்பமாக ஆலயத்திற்கு கடந்து செல்ல ஜெபியுங்கள்.

**ஊத்துப்பட்டி** – மேரி என்ற சகோதரி ஜெபவாழ்க்கையில் வளர்ச்சியடைய ஜெபியுங்கள். உடன்பிறந்த சகோதரிகள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

பணித்தளம் : **7000 பண்ணை**

தேவனுடைய கூடாரத்தில் சிறுவர் முகாம் நடைபெற தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். திறப்பின் வாயில் ஜெபத்திலும் முழுஇரவு ஜெபத்திலும் அநேகர் கலந்து கொண்டு ஜெபிக்க ஜெபியுங்கள். இயேசுவோடு இனியமாலையில் அநேக வாலிப சகோதரிகள் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

**திண்டுக்கல் மாவட்டம்**

**விராலிப்பட்டி** – விராலிப்பட்டி ஆலயத்திற்கு கடந்து வருகிற வாலிப சகோதரிகள் தற்போது வரவில்லை. இவர்கள் கடந்து வர ஜெபிக்கவும். இவர்களது பெயர்கள் சுந்தரி, மாரீஸ்வரி, பிரவினா, ரேணுகாதேவி, போதும்மணி, இந்திராணி, சின்னம்மா, கமலா, ஸ்ரீதேவி, அனிதா, கீதா, பிரியா, தீபா

சகோ. ராமலிங்கம் ஞானஸ்நானம் பெற்றபின் கோயில் பூசாரியாய் வாழ்கிறார். இவர் மனம் திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிக்கவும். **சின்னநாயக்கன் கோட்டை** – சகோ. ஜெயக்கொடி ஞானஸ்நானம் பெற்ற பின்னும் குடிக்கிறார். இவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிக்கவும். **மீனாட்சிபுரம்** – சகோ. குமார் – கமலம், சகோதரி. சுதா – முத்துராமன், ராணி – சேகர் இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

பணித்தளம் : **தொட்டம்பட்டி**

சகோதரி. இல்க்கியாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், மிஷனெரி மகள் காருண்யா விரைவில் நடக்கவும் ஜெபிக்கவும். **தோப்புப்பட்டி** – சகோ. செல்வனின் மகன் 6 வயது ஆகியும் எழுந்து நடக்கவில்லை. இவரது மகன் நன்றாக நடக்க... **தோட்டக்காரன்பட்டி** – அழகர்சாமி கால் எலும்பு முறிவு சுகமாகி நன்றாக நடக்க.... **அப்பாவுபிள்ளைபட்டி** – கோபி மனநிலை சுகமாகி வாய்திறந்து பேச ஜெபிக்கவும்; அழகர்சாமி வீடுகட்ட தேவையான பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும்.

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு**

சபைக்கு வருகின்ற புதிய 4 வாலிபர்களுக்காகவும் அவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட..... சகோதரி. எஸ்தருக்கு இருதய நோயிலிருந்து தேவன் விடுதலை கொடுக்க..... சகோதரி. அன்பரசியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட.... வெத்தியார் வெட்டு ஆலயத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்ட ஜெபிக்கவும்.

**திருப்பூர் மாவட்டம்**

**தொட்டிப்பாளையம்** – சகோதரி. சித்ரா கணவனை விட்டு பிரிந்து வாழ்கிறார். கணவனும், மனைவியும் ஒற்றுமையுடன் வாழ ஜெபிக்கவும். தொட்டிப்பாளையத்தில் ஆலயம் கட்டுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும்.

**திருச்சி மாவட்டம்**

**மணப்பாறை** – சகோ. ஜெரால்டு அவர்களின் மகன் ஜெபினுக்கு சிறுநீரக வியாதியிலிருந்து தேவன் சுகம் கொடுக்க... **புலான்பட்டி** – சகோ. சேசுராஜ் இவர்களின் மனைவி அடிக்கடி பெலவீனத்தால் பாதிக்கப்படுகிறார்கள். பெலவீனத்திலிருந்து தேவன் விடுதலை கொடுக்க..... **செவல்பட்டி** – பின்வாங்கிய நிலையில் உள்ள ஆராயி, பானு



**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2012 நவம்பர் 31 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## வாலிபர் வெற்றி முகாம்

இடம் : **CSI ஆலயம், பெரியநாயகபுரம்**

நாள் : **4-11-2012 காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி முடிய**

*தேவ செய்தி :* **சகோதரி. வசந்தி கிரேஸ் மோகன்தாஸ்** பாளை

**Dr. P.T.R. தியோபிலஸ் ரோஜர்**

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**பதிவு கட்டணம் ரூ. 10/- (மதிய உணவு உண்டு)**

**தொடர்பிற்கு : 94863 75960, 9443289026**

**திரு. கோயில்பிச்சை** – சபை ஊழியர்

**Rev.P. ஆபிரகாம் பீட்டர்** – சேகர குரு

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

இருவர் குடும்பமும் மீண்டுமாக தேவனை ஏற்றுக்கொள்ள ஜெபிக்கவும்.

**மதுரை மாவட்டம்**

**திரளி** – திரளி பணித்தளத்தில் நடைபெற இருக்கும் வாலிபர் முகாமில் 100 வாலிபர்கள் கலந்து கொள்ளவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிக்கவும்.

ஸ்டெபின், எஸ்தர் 10ம் வகுப்பு படிக்கும் இவர்கள் நன்றாக படிக்க ஜெபிக்கவும்.

**பச்சகோப்பன்பட்டி** – சவுந்தரபாண்டியன் மனைவி மற்றும் தாய் பிசாசு பிடியிலிருந்து விடுதலை கிடைக்கவும், குடும்பத்தில் சமாதானம் உண்டாகவும் ஜெபிக்கவும். பாண்டியம்மாவுக்கு சுயநினைவு உண்டாக ஜெபிக்கவும். புதிதாக ஆராதனை நடத்தும் கிழவனேரி மற்றும் அச்சம்பட்டியில் அநேகர் ஆராதனையில் கலந்து கொண்டு ஞானஸ்நானம் எடுக்க ஜெபிக்கவும். சிறுவர் முகாமிற்கு வந்த பிள்ளைகள் தொடர்ந்து ஆராதனை மற்றும் சிறுவர் கூடுகையில் கலந்து கொள்ள ஜெபிக்கவும்.

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **மேலச்செவல்**

இந்திரா நகரில் குடியிருக்கும் சகோதரி. மேரி வீட்டிற்கு மின்சாரம் கிடைக்கவும், செல்வம் வீடு முழுவதுமாக கட்டி முடிக்கவும் ஜெபிக்கவும்

பணித்தளம் : **பாளையங்கோட்டை**

சகோ. ஐசக் என்பவருக்கு சுகர் வியாதியினால் கால் எடுக்கப்பட்டுள்ளது. இவருக்கு கால்வலி நீங்கி பூரண சுகம் கிடைக்க ஜெபிக்கவும். சகோதரர். ஜான்ரோஸ் என்பவருக்கு ஞாபகசக்தி கிடைக்க ஜெபிக்கவும்.

பணித்தளம் : **திருவேங்கடம்**

சகோதரி. வசந்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், முத்துராஜ் குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளவும், முத்துலட்சுமி இயேசுவை ஏற்றுக்கொள்ளவும்...

திருவேங்கடத்தில் ஆலயம் கட்டுவதற்கு தடையாக உள்ள காரியங்கள் மாறவும், அங்கு கட்டப்பட்டுள்ள கிருபையின் இல்லத்தில் வயரிங் வேலை நடைபெறவும் அநேகர் கலந்து கொள்ள ஜெபிக்கவும்.

பணித்தளம் : **அழகப்பபுரம்**

சகோதரி. ஜீவரேகா ஹோட்டல் வியாபாரத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிக்கவும். ஹேமா என்ற சகோதரிக்கும் அவர்களின் மாமியார் இருவருக்கும் தேவன் சமாதானம் கொடுக்க ஜெபிக்கவும்.

**கீழ்குளம்** – சகோ. சார்லஸுக்கு ஆஸ்த்துமா வியாதி மாறவும், அவரை விட்டு பிரிந்து போன மனைவி பிள்ளைகள் மீண்டுமாக அவருடன் சேர்ந்து வாழ ஜெபிக்கவும்.

**விசுவாசபுரம்** – சகோதரி. தமிழரசியின் காலில் உள்ள புண் ஆறவும், வீக்கம் மறையவும்.... **கலந்தபனை** – சகோதரி. சவித்தாள் என்பவருக்கு நிச்சயமான திருமணம் ஏற்றகாலத்தில் நடைபெற.... **நம்பிபத்து** – சகோதரி. ரீட்டா குடும்பத்தில் உள்ள பிரச்சனை மாறவும் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **வடமலாபுரம்**

சகோ. போவாஸ் என்பவர் வியாபார விஷயமாக கொடுத்த பணம் திரும்ப அவர் கைக்கு கிடைக்க ஜெபிக்கவும். வடமலாபுரத்தில் சாராள் அம்மா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிக்கவும். பழனி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிக்கவும்.

**சங்கரன் கோவில்** – சகோ. பால்ராஜ் என்பவருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...



பணித்தளம் : **அத்தியூத்து**

சகோ. ஜேம்ஸ் கடன் பிரச்சனை மாறவும், சகோதரி. துரைச்சிக்கு கண்பார்வை தெளிவாக கிடைக்கவும், சின்ன பண்டாரம் அவர்களுக்கு வெட்டு வியாதியிலிருந்து சுகம் கிடைக்கவும் ஜெபிக்கவும்.

**சீதப்பநல்லூர்** – சகோ. மணிகண்டன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், ராசுகுட்டி பாட்டிக்கு ஆஸ்துமா வியாதியிலிருந்து தேவன் சுகம் கொடுக்கவும் ஜெபிப்போம்.

**ஆலங்குளம்** – மாதந்தோறும் முதல் திங்கட்கிழமை நடைபெறும் அற்புதத்தின் மாலை கூட்டத்தில் அநேகர் கலந்து கொள்ள.... **சிறுக்கன்குறிச்சி** – ஆண்டித்தேவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், இசக்கியம்மாவுக்கு அசுத்த ஆவியிலிருந்து தேவன் விடுதலை கொடுக்கவும், சகோதரி கமலாவுக்கு ஆஸ்துமா வியாதி குணமாக ஜெபிப்போம்.

## நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் – லேவி. 20:8

1. **முற்றிலும் பரிசுத்தம் – 1தெச. 5:23**
சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக.
2. **பிழையற்ற பரிசுத்தம் – 1தெச. 3:13**
நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.
3. **தம்முடைய பரிசுத்தம் – எபி. 12:10**
இவரோ தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.
4. **இன்னும் பரிசுத்தம் – வெளி. 2:11** – பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.
5. **அன்பில் பரிசுத்தம் – எபே. 1:4**
தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமா யிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்.
6. **நடத்தைகளில் எல்லாவற்றிலும் பரிசுத்தம் – 1பேதுரு 1:15**
உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்
7. **பரிசுத்த அலங்காரம் – சங். 96:9**
பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்.
8. **அழைப்பு பரிசுத்தம் – 2தீமோ. 1:9**
கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.
9. **கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம் – மல். 2:11**
கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்த குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்.
10. **கர்த்தருக்கு பரிசுத்தம் – சக. 14:20**
அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்.
11. **துதி செலுத்துகிறதற்கு ஏற்ற பரிசுத்தம் – லேவி. 19:20**
12. **நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள். லேவி. 20:7**